வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 02.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஆயுஷ் மருத்துவத் துறையில் இந்தியா உலகிற்கே முன்னோடியாக திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி சங்கீத சம்மேளனத்தின் 67 ஆவது விழா இன்று மாலை புதுடெல்லி, மும்பை மற்றும் சென்னையில் இசை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது.

பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தை 7 நாடுகளை சேர்ந்த தூதரக அதிகாரிகள் இன்றும், நாளையும் பார்வையிடுகின்றனர்.

புதுவையில் கல்லறை திருநாள் இன்று அனுசரிக்கப்பட்டது.

குடியரசு தலைவர் (16)

ஆயுஷ் மருத்துவத் துறையில் இந்தியா உலகிற்கே முன்னோடியாக திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். உத்ராகண்ட் மாநிலம் ஹரித்துவாரில் உள்ள பதஞ்சலி பல்கலைக்கழக

பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க பதஞ்சலி நிறுவனம் முக்கிய பங்கு வகிப் பதாக கூறினார். முன்னதாக, டேராடூன் சென்ற அவரை விமான நிலையத்தில் அம்மாநில ஆளுநர் லெப்டின்னட் ஜெனரல் குர்மித் சிங், முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி ஆகியோர் வரவேற்றனர். டேராடூனில் உள்ள ராஜ்பூர் சாலையில் அமைந்துள்ள நடைமேம்பாலத்தை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு திறந்து வைத்தார். இன்று மாலை ராஷ்டிரபதி பவனில் நடைபெறும் சர்வதேச இலக்கியம், கலாச்சாரம் மற்றும் கலை விழாவில் பங்கேற்பாளர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார். நாளை அம்மாநில சட்டப்பேரவையில் குடியரசு தலைவர் உரையாற்றுகிறார். அதனை தொடர்ந்து நைனிடாலில் உள்ள ஆளுநர் மாளிகை அமைக்கப்பட்டதன் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்பதுடன், குமாயுன் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலும் திருமதி முர்மு கலந்து கொள்கிறார்.

*பிரதமர்* (13)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மாநாடு 2025 ஐ தொடக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியில் இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு

சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க திட்ட நிதியையும் பிரதமர் வழங்குகிறார். நாளை தொடங்கும் இந்த மாநாடு வரும் 5 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இம்மாநாட்டில் கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில் துறை மற்றும் அரசாங்கத்தை சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். இது, இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த உதவும். இந்நிகழ்ச்சியில், ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறை மற்றும் இளம் கண்டுபிடிப்பாளர்கள் இடையே ஒத்துழைப்பிற்கான தளத்தை வழங்கும் விவாதங்கள், விளக்கக் காட்சிகள் இடம் பெறும்.

*சங்கீத மே□ா 1 (6)*

ஆகாஷ்வாணி சங்கீத சம்மேளனத்தின் 67 ஆவது விழா இன்று மாலை புதுடெல்லி, மும்பை மற்றும் சென்னையில் இசை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. ஒரு மாத காலம் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், நாடு முழுவதும் 24 நகரங்களில் பாரம்பரிய இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. கலாச்சார அமைச்சகம் மற்றும் பிரசார் பாரதி இணைந்து இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ்)

*சங்கீத மே□ா 2 (17)* (வாய்ஸ்)

1954 ஆம் ஆண்டு தொடங்கி, ஆகாஷ்வாணி சங்கீத சம்மேளனம் இந்தியாவில் மிகவும் நீடித்த மற்றும் மதிக்கப்படும் கலாச்சார மரபுகளில் ஒன்றாக நிலைத்து நிற்கிறது என்று தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள பார்வையாளர்களுக்கு இந்துஸ்தானி, கர்நாடக இசை மற்றும் நாட்டுப்புற இசையின் சிறந்த படைப்புகளை வெளிக் கொண்டு வருவதற்காக இந்த சம்மேளனம் உருவாக்கப் பட்டது. இந்தியாவின் வளமான இசை பாரம்பரியத்தை பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் பிரபலப்படுத்துவதில் இச்சம்மேளனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதுகுறித்த விவரங்களை அளித்த பிரசார் பாரதி தலைமை நிர்வாக அதிகாரி திரு கவுரவ் திவேதி, கோவிட் -19 தொற்று

நோய் காரணமாக சிறு தடங்களுக்கு பிறகு இந்த ஆண்டு இந்த பிரமாண்டமான விழா புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்துடன் நடைபெற உள்ளதாக தெரிவித்தார். 2025 பதிப்பில் ஒவ்வொரு இடத்திலும் 2 இசை நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒன்று, இந்திய பாரம்பரிய இசை. மற்றொன்று, நாட்டுப்புற இசைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பனாஜி மற்றும் ஷிலாங் ஆகியவை இந்தியாவின் பிராந்திய இசை பன்முகத் தன்மையை பிரதிபலிக்கும் மேற்கத்திய பாரம்பரிய நிகழ்ச்சிகளை பிரத்யேகமாக நடத்துகிறது.

*பீகார் சட்டப்பேரவை (9)*

பீகார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தை 7 நாடுகளை சேர்ந்த தூதரக அதிகாரிகள் இன்றும், நாளையும் பார்வையிடுகின்றனர். பிஜேபி -யின் ஏற்பாட்டின் பேரில் இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, டென்மார்க், இந்தோனேஷியா மற்றும் பூடான் நாடுகளின் தூதரக அதிகாரிகள், இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் தேர்தல் நடைமுறைகளை அறிந்து கொள்ள உள்ளனர். பாட்னா, நாலந்தா, கயா உள்ளிட்ட சட்டப்பேரவை தொகுதிகளுக்கு செல்லும் இக்குழுவினர் தேர்தல் பிரச்சார கூட்டங்கள் மற்றும் வாக்குச்சாவடி அளவிலான பணிகளை பார்வையிடுகின்றனர்.

கல்லறை திருநாள் 1 (3)

புதுவையில் கல்லறை திருநாள் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி, ஏராளமான கிறிஸ்துவர்கள் தங்களது முன்னோர்களின் கல்லறைகளை அலங்கரித்து, அஞ்சலி செலுத்தினர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ்)

கல்லறை திருநாள் 2 (17)

(வாய்ஸ்)

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்துவர்கள் ஆண்டுதோறும் நவம்பர் 2 ம் தேதி சகல ஆன்மாக்கள் தினம் எனப்படும் கல்லறை திருநாளை கடைபிடிப்பது வழக்கம். இந்நாளில் அவர்கள் இறந்துபோன தங்களது உறவினர்கள் மற்றும் முன்னோர்களின் கல்லறைகளுக்கு சென்று, அவற்றை சுத்தம் செய்து அலங்கரித்து, பிடித்த உணவு பொருட்களை வைத்து அஞ்சலி செலுத்துவர். அதன்படி புதுவையில் கல்லறை திருநாள் இன்று அனுசரிக்கப்பட்டது. புதுவை உப்பளம், வில்லியனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கல்லறைகளை, நேற்று உறவினர்கள் தூய்மைப்படுத்தினர். இன்று காலை முதல் ஏராளமானோர் தங்களது முன்னோர்களின் கல்லறைகளுக்கு வந்து, கல்லறைகளை மலர்களால் அலங்கரித்தனர். மேலும் மெழுகுவர்த்தி ஏற்றி பிராத்தனை செய்தனர். கல்லறையில் பாதிரியார்கள் மந்திரித்தனர். முன்னோர்களுகசு பிடித்தமான உணவு பொருட்களும் கல்லறைகளில் படையலிடப்பட்டன.

இதனிடையே, புதுச்சேரியில் கல்லறை திருநாளையொட்டி சென்னை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் இருந்து விதவிதமான ரோஸ்கள், புளூடெய்சி, ஆஸ்ட்ரெஸ் உள்ளிட்ட மலர்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

ஜெய்சங்கர் (14)

பஹ்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு அப்துல் லத்திப் பின் ரஷித் அல்சயானி 2 நாள் பயணமாக இன்று இந்தியா வந்தடைந்தார். இந்த பயணத்தின் போது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்திக்கிறார். இச்சந்திப்பின் போது கல்வித்துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு நோக்கத்தை விரிவுப்படுத்தவும், தூதரக விவகாரங்களில் ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவது, இரு தரப்பு பாதுகாப்பு உரையாடல் மற்றும் கூடுதல் வழிகாட்டுதல் குழு, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு துறையில் சில வழிமுறைகள் குறித்து கலந்துரையாட உள்ளனர். அவர் நாளை இந்தியாவில் இருந்து பஹ்ரைனுக்கு திரும்புகிறார். இந்தியாவும் பஹ்ரைனும் சிறந்த இருதரப்பு உறவுகளை கொண்டுள்ளன. அவை அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் மக்களிடையேயான தொடர்புகளால் வகைப்படுத்தப்படுகின்றன.

*ஜிஎஸ்டி- ஆந்திரபிரதேசம் 1  (5)*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி பச்சத் உத்சவ் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் ஆந்திரபிரதேச மாநிலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த ஒரு செய்தி தொகுப்பு,............

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி-ஆந்திரபிரதேசம் 2  (20)*

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் ஆந்திராவின் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்குகின்றன. புதிய வரி கட்டமைப்பின் கீழ், மீன் எண்ணெய்கள், சாறுகள், பாதுகாக்கப்பட்ட பொருட்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் டீசல் என்ஜின்கள் மீதான ஜிஎஸ்டி விகிதம் 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு சிறிய செயலிகள் மீதான வரிச்சுமையைக் குறைத்து கடலோரப் பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது. ஜிஎஸ்டி 2.0 இல், அரக்கு காபி, தோல் பொம்மை மற்றும் கல் சிற்பங்கள் போன்ற சிறப்புப் பொருட்களுக்கான ஜிஎஸ்டியையும் அரசாங்கம் குறைத்துள்ளது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களுக்குப் பிறகு இந்த பொருட்கள் இப்போது முந்தைய 12 சதவீதத்திலிருந்து 5 சதவீத ஜிஎஸ்டியை மட்டுமே ஈர்க்கின்றன. இது உள்நாட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் மற்றும்

மாநிலத்தின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும். 350 சிசி வரை எஞ்சின் திறன் கொண்ட மூன்று சக்கர வாகனங்கள், சிறிய கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான ஜிஎஸ்டியையும் அரசாங்கம் குறைத்துள்ளது. இந்தப் பொருட்கள் 18 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன, இதனால் ஆட்டோமொபைல்கள் நுகர்வோருக்கு மிகவும் மலிவு விலையில் கிடைக்கின்றன, இந்த மாற்றங்கள் செலவுகளைக் குறைக்கின்றன, தேவையை அதிகரிக்கின்றன மற்றும் மாநிலத்தின் ஏற்றுமதி திறனை வலுப்படுத்துகின்றன, அதே நேரத்தில் வீடுகளின் சுமையைக் குறைக்கின்றன.

*வானிலை* (4)

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று முதல் வரும் 6 ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மராத்தான்* (8)

முப்படையினரின் நலனுக்கான செகான் நினைவு மாரத்தான் ஓட்டம் புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. விமானப்படை சார்பில் நடைபெற்ற இந்த ஓட்டத்தை டெல்லி ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் இருந்து விமானப்படை தலைமை தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ பி சிங் தொடக்கி வைத்தார். கடந்த 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா-

பாகிஸ்தான் போரின் போது ஸ்ரீநகர் விமானப்படை தளத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நிர்மல் ஜித் சிங் ஷெகான் நினைவாக இந்த ஓட்டம் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

வி□ையாட்டு (10)

2025 ஆம் ஆண்டு ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகளில் 48 பதக்கங்கள வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நாட்டின் இளம் விளையாட்டு வீரர்கள் தங்கள் சிறந்த செயல்திறனுடன் விளையாட்டு போட்டிகளில் வரலாறு படைத்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விளையாட்டு வீரர்களின் ஆர்வம், உறுதிப்பாடு மற்றும் கடின உழைப்பு தெளிவாக தெரிவதாக பிரதமர் பதிவிட்டுள்ளார். அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டு ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை பஹ்ரைனில் நிறைவடைந்தன.